துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 25.11.2024 அன்று கடலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிந்து, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று (22.11.2024) திருப்பாதிரிப்புலியூர் புனித வளனார் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாநகராட்சி ஆணையாளர் மரு.எஸ்.அனு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி இரா.சரண்யா உட்பட பலர் உள்ளனர்.

கழக விவசாய அணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் ஈரோட்டில் விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எம்.கந்தசாமி, கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்எல்டி.ப.சச்சிதானந்தம், விவசாய அணி இணை செயலாளர்கள் கள்ளிப்பட்டி மணி, குறிஞ்சி என்.சிவக்குமார், அப்துல் காதர், நாகை அருள்செல்வன், எல்.பி.தர்மலிங்கம், முத்துராமலிங்கம், கே.குமார் முருகேஸ், டி.எஸ்குமாரசாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், வீரமணி உள்ளிட்ட விவசாய அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை அணியின் சார்பில் சிறப்பாக கொண்டாடுவது எனவும், கழக ஆக்கப் பணிகள் ஆற்றுவது குறித்தும் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக விவசாய அணி சார்பில்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவோம்!

ஏ.கே.எஸ்.விஜயன் தலைமை!அந்தியூர் ப.செல்வராசு எம்.பி., அமைச்சர் சு.முத்துசாமி பங்கேற்பு!

ஈரோடு, நவ.22- கழக விவசாய அணி மாநில, மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள் கூட்டம் ஈரோட்டில் விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு எம்.பி., ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எம்.கந்தசாமி, கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ் எல்டி. ப.சச்சிதானந்தம், விவசாய அணி இணை செயலாளர்கள் கள்ளிப் பட்டி மணி, குறிஞ்சி என். சிவக்குமார், அப்துல் காதர், நாகை அருள்செல்வன், எல். பி.தர்மலிங்கம், முத்து ராம லிங்கம், கே.குமார் முரு கேஸ், டி.எஸ்குமாரசாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், வீர மணி உள்ளிட்ட விவசாய அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற் றப்பட்டன.

கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சராக நியமனம் செய்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றி தெரி வித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு துணை முதல மைச்சராக பதவி ஏற்று சிறப்பாக செயல்பட்டு வரும் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விவசாய அணியின் சார்பில் வாழ்த் துக்களையும், பாராட்டுக ளையும் இக்கூட்டம் தெரி வித்து கொள்கிறது.

வருகிற நவம்பர் 27ம் தேதி பிறந்த நாள் காணும் துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்க ளுக்கு விவசாய அணி சார் பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

மேலும் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்க ளின் பிறந்த நாளை அனைத்து மாவட்டத்திலும் விவசாய அணி சார்பில் பொதுமக்கள் பயன்படும் வகையில் நல உதவிகள் வழங்கி சிறப்பாக கொண் டாடுவது எனவும் கிராமங் களில் உள்ள சிறு, குறு, நடுத் தர விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள், மரக்கன்றுகள் வழங்குவ தெனவும் இக்கூட்டம் தெரிவித்து கொள்கிறது.

கழக தலைவர் - தமிழ் நாடு முதலமைச்சர் அவர் கள் கரும்பு விவசாயிகளுக்கு ஊக்க தொகையாக 225 கோடி ரூபாயை வழங்கிய தற்கு இக்கூட்டம் நன்றி தெரிவித்து கொள்கிறது.

நடந்து முடிந்த நாடா ளுமன்ற தேர்தலில் 40க்கு 40 வெற்றி பெற்று வர லாற்று சாதனை படைத்த நமது கழக தலைவருக்கு இக்கூட்டம் வாழ்த்துக் களை தெரிவித்து கொள்கி றது. மேலும் வருகிற சட்ட மன்ற தேர்தலில் 240 தொகு திகளிலும் வெற்றி பெற விவசாய அணி சார்பில் இன்று முதல் தொடர்ந்து பாடுபட வேண்டும் என்று இக்கூட்டத்தில் தீர்மா னங் கள் நிறைவேற்றப்பட்டன.

மு.சண்முகம் எம்.பி. - கி.நடராசன் - கோ.சி.வள்ளுவன் பங்கேற்பு!

அமைப்புசாரா தொ.மு.ச. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பொதுச் செயலாளர் இரா.பொன்னுராம் அறிக்கை!

சென்னை, நவ. 23 - அமைப்பு சாரா தொ.மு.ச. நிர்வாகிகள் கலந் தாய்வுக் கூட்டம், தொழில் ரீதியான அமைப்பு சாரா தொழிற்சங்கங்கள், புதிதாக இணைய கோரப்பட்டுள்ள தொழிற்சங்கங்களை ஒருங் கிணைப்பது தொடர்பா னக் கூட்டம் இன்று நடை பெறுகிறது . இதில் தொ.மு.ச. பொதுச் செயலா ளர் மு.சண்முகம் எம்.பி. கலந்நது கொண்டு ஆலோ சனை வழங்குகிறார்.

இது குறித்து அமைப்பு சாரா மாநிலச் செயலாளர் இரா.பொன்னுராம் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:-

தொழிலாளர் முன்னேற் றச் சங்கப் பேரவையுடன் இ ணை க்க ப் ப ட் டு ள் ள தமிழ்நாடு அனைத்து அமைப்புசாரா தொ.மு.ச. (பதிவு எண். 3284/CNI, பேரவை இணைப்பு எண். 1000) மற்றும் தொழில் ரீதி யான அமைப்புசாரா தொழிற் சங்கங்கள் மற்றும் புதியதாக இணைப்பு கோரப் பட்டுள்ள அமைப் புசாரா, கட்டுமான தொழிற்சங்கங்கள் மற்றும் தனியாக செயல்படும் கழக ஆதரவு பெற்ற அமைப்பு சாரா சங்கங்கள் ஆகிய வற்றை ஒருங்கிணைத்து அமைப்புசாரா தொழிற் சங்க கூட்டமைப்பு ஏற்ப டுத்துவது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் இன்று (23.11.2024- சனிக் கிழமை) காலை 10.00 மணி யளவில் சென்னை தொ. மு.ச. பேரவை தலைமை அலுவலகமான "கலைஞர கம்" கூட்ட அரங்கில் தொ.மு.ச. பேரவைத் தலை வர் கி.நடராசன் தலைமை யில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தொ. மு.ச. பேரவைப் பொதுச்செ யலாளர் மு.சண்முகம் எம். பி., பேரவைப் பொருளா ளர் கோ.சி.வள்ளுவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர். மற்றும் பேரவை நிர்வாகிகள் கலந்து கொள் கின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் ஏற்கனவே உள்ள அமைப்பு சாரா மாவட்ட நிர்வாகிகள், இணைப்புச் சங்க நிர்வாகிகள், இணைப்பு கோரியுள்ள மற்றும் கழக ஆதரவு பெற்ற அமைப்பு சாரா சங்கத்தின் நிர்வாகிகள் தங்கள் சங்கத் தின் சார்பில் 3 நபர்கள் வீதம் தவறாமல் கலந்து கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: அமைப்பு சாரா மற்றும் கட்டுமான தொழிற்சங்கங்கள் கூட்ட மைப்பு ஏற்படுத்துவது தொடர்பாக.

இவ்வாறு அனைத்து அமைப்பு சாரா தொ.மு.ச. பொதுச் செயலாளர் இரா. பொன்னுராம் அறிக்கை யில் கேட்டுக் கொண்டுள் ளார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி - அமைச்சர் மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் கலைஞர் நூலகம் திறப்பு விழா!

மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் அறிக்கை!

நாமக்கல், நவ.23- நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வரு மாறு:-

நாமக்கல் மேற்கு மாவட் டத்திற்குட்பட்ட திருச் செங்கோடு சட்டமன்ற தொகுதி, சூரியம்பாளைய த்தில் கலைஞர் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவை முன் னிட்டு புதியதாக அமைக் கப்பட்டுள்ள கலைஞர் நூல கம் திறப்புவிழா நாளை (24.11.2024) காலை 11.00 மணிக்கு நடைபெறவுள் ளது.

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்க ளின் ஆணைப்படி, கழக இளைஞர் அணிச் செயலா ளர், இளந்தலைவர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி நாமக் கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப் பினர் எஸ்.எம்.மதுரா செந் தில் தலைமையில், ஆதிதிரா விடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பி.எஸ்.சீனிவா சன், நகர கழக செயலாளர் டி.கார்த்திகேயன், நகர் மன்ற தலைவர் எஸ்.நளினி சுரேஷ்பாபு, ஒன்றிய கழக செயலாளர் வட்டூர் ஜி.தங் கவேல் ஆகியோர் முன்னி லையில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர் கள் கலைஞர் நூலகத்தை திறப்பு விழா செய்து சிறப்பு ரையாற்றவுள்ளார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி மற்றும் துணை அமைப்பாளர்கள் பூக்கடை சுந்தர், நவலடி ராஜா, கதிர வன், மல்லை ஜெகதீஸ்கு மார், கார்த்திகேயன், முரளி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள திறப்பு விழாவில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் உள் ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மதுரா செந் தில் தெரிவித்துள்ளார்.

சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில்,

சுற்றுலாத்துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, நவ.23- சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், இன்று (22.11.2024) சுற்று லாத்துறை மற்றும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இரா ஜேந்திரன் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற் றது.

இக்கூட்டத்தில் சுற் றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர்.சந்தரமோகன் பி, சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற் றது.

இக்கூட்டத்தில் சுற்று லாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசுகை யில்,

சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழகம் ஆகியவற்றின் பிரிவுகள், கட்டமைப்பு வச திகள், செயல்பாடுகள் குறித்து உயர் அலுவலர்களி டம் கேட்டறிந்தார். சுற் றுலா திட்ட பணிகள் விழா க்கள் குறித்தம், மாவட்டம் வாரியாக உள்ள சுற்றுலா அலுவளர்களிடம் சுற்றுலா தளம் சிறப்பு அம்சம் குறித் தும், நடைபெற்றுவரும் திட்டப்பணிகள் குறித்தும், மேலும், புதிய சுற்றுலா தலங்கள் உருவாக்குவதற் கான வழிமுறையை ஆராய வும் மற்றும் சுற்றுலா தலங் கள் அமைக்க மற்ற துறைகளிடமிருந்து தடை யில்லா சான்று பெறுவது குறித்தும், New Development Bank மூலம் சுற்றுலாவிற்கான முக்கிய இடங்களை தேர்ந் தெடுத்து புதிய சுற்றுலா தளங்களை உருவாக்குவதற் கான திட்டங்கள் குறித்தும், கடற்கரை சுற்றுலா மேம்ப டுதுவது குறித்தும், பிரபலம் அடையாத சுற்றுலா தளங் களை பிரபல படுத்த புதிய திட்டங்கள் வகுத்தல் குறித் தும் மற்றும் புதிய இடங்க ளில் ROCK CLIMBING என்ற சொல்லக்கூடிய சாகச சுற் றுலா, VIRTUAL TOURISM, ONLINE PLATFORM களை பிர பல படுத்துவது குறித்தும், மேலும் ஒவ்வொரு மாவட் டத்திலும் சுற்றுலாவை மேம்படுத்த புதிய திட்டங் கள் கொண்டுவருவது குறித் தும் மற்றும் தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள், படகு இலங் கள் மற்றும் சுற்றுலா குறித் தும் சுற்றுலாத்துறை அமைச் சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார் கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சுற்றுலா வளர்ச்சிக்காக 1971 ல் ஆரம் பிக்கப்பட்ட தமிழ்நாடு சுற் றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 26 ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. மேலும் நீங் காத அனுபவங்களை தரும் வகையில் 9 படகு குழாம் கள் மூலம் சுற்றுலா பயணி களுக்கு படகு சவாரி மே ற்கொள்ள சேவை அளித்து வருகின்றது. 3 தொலை நோக்கி இல்லங்களையும் செயல்படுத்தி வருகின்றது. மேலும் 5 வால்வோ சொகுசு போருந்துகள், 6 அதிநவீன சொகுசு பேருந்து கள், 3 சிறிய ரக சொகுசு பேருந்துகள் என 14 பேருந் துகள் மூலமாக புகழ்பெற்ற திருப்பதி சுற்றுலா, மாமல்பு ரம் சுற்றுலா, வெளிமாநில சுற்றுலா பயணிகளின் விருப்பமான 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா உள் ளிட்ட 52 வகையான சுற் றுலா பயணத்திட்டங்களை செயல்படுத்தி குறைந்த செலவில் பொதுமக்கள் சுற் றுலா பயணம் மேற் கொள்ள சேவையாற்றி வரு கின்றது.

மேலும், முதலமைச்சர் அவர்கள் ஓட்டல் தமிழ் நாடு உணவகங்களுக்கு அமுதகம் என்று பெயர் சூட்டி உணவகங்கள் சுற் றுலா பயணிகளுக்கு எளி தில் அடையாளம் காணச் செய்துள்ளார்கள். மேலும், முதலமைச்சர் அவர்களின் 2030 ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் டாலர் இலட் சிய இலக்கினை அடைய சுற்றுலாத்துறையின் பங்க ளிப்பு முதன்மையாக இருக் கும் வகையில் பணியாற்றி டுவோம் என்று சுற்றுலா த்துறை அமைச்சர் அறிவுரித் தினார்கள்.

இக்கூட்டத்தில் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் மற் றும் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ச.கவிதா, சுற்றுலாத்துறை இணை இயக்குநர் ப.புஷ்பராஜ் உள்பட சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அரசு அலு வலர்கள் கலந்து கொண்ட னர்.

திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, கும்முடிப்பூண்டி சிப்காட் 110 kv துணை மின்நிலையத்தில் இருந்து 11 kv எளாவூர் பீடர் இருந்து புதியதாக 11 kv சுண்ணாம்புகுளம் பீடராக மாற்றும் பணியை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் இயக்கி வைத்தார். ரூபாய் 60.00 லட்சத்திற்கான கான திட்ட மதிப்பில் சுண்ணாம்புகுளம், ஓபசமுத்திரம், தலையாரி பாளை யம், துரப்பள்ளம், நரசிங்கபுரம், சென்னவரம், எளாவூர் சுற்றி உள்ள கிராமங்கள் பயன் அடைகின்றன. நிகழ்ச்சியில் மு.மணிபாலன், எம்.எல்.ரவி. எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், மு.பாஸ்கர், எஸ்.ராமஜெயம், மு.கேசவன், அப்துல்கரீம், எஸ்.சி.பல்லவன், ஆர்.எஸ்.காளத்தி. எம்.ஜெயசந்திரன், எஸ்.எம்.ரவி, கே. ஜி.நமச்சிவாயம், தியாகராஜன் சுரேஷ், கௌதம் முரளி, குணா, பாலுமகேந்திரன், கட்டைபாலு, சிவராம ரெட்டி, தியாகு கே.ஜி.ரவி. பா.பரத்குமார், டி.முகிலன், தகவல் தொழில் நுட்ப அணி பிரதாப் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தென்காசி வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டடம்!

மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா அறிவிப்பு!

தென்காசி, நவ. 23 - தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற் குழு கூட்டம் இன்று (23.11.2024 - சனிக் கிழமை) மாலை 5 மணி அளவில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில்

மாவட்ட அவைத் தலைவர்கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெறு கிறது.என தென்காசி வடக்கு மாவட்டச் செய லாளர் ஈ.ராஜா எம். எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி, கழக இளைஞர் அணி செயலா ளர்-துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர் களின் வழிகாட்டுத லின்படி,

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயற் குழு கூட்டம் சங்கரன் கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட் டக் கழக அலுவலகத்தில் இன்று (23 ஆம் தேதி) மாலை 5 மணி அளவில் மாவட்ட அவைத் தலை வர் கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெறு கிறது.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட கழக நிர்வாகி கள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப் பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலா ளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: வருகிற 27ஆம் தேதி கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண்டாடு வது குறித்தும்.

கழக வளர்ச்சி பணி கள்.

இவ்வாறு அவர் தெரி வித்துள்ளார்.

திருவொற்றியூர் குப்பம் பகுதியில் ரூபாய் 200 கோடி செலவில், மாநில அரசின் நிதியின் கீழ் புதிதாக கட்டப்பட்டு வரும் சூரை மீன் பிடி துறைமுகத்தை மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், ஆகியோர் முன்னிலையில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் மண்டலக் குழுத் தலைவரும், கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளருமான அண்ணன் தி.மு.தனியரசு, மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் வை.ம.அருள்தாஸ், மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி கணேசன் மற்றும் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மீன்வளத் துறை அதிகாரிகள் உடனிருந்தனர்.